# அன்னை கல்வியியல் கல்லூரியில் தேசிய அளவிலான கருத்தரங்கம்




கும்பகோணம்,மே.12-

கும்பகோணம் கோவிலாச்சேரியில் அன்னை கல்வியியல் கல்லூரியில் "கற்றல் கற்பித்தலில் புதுமையான கல்வி ஆராய்ச்சி" என்ற தலைப்பில் தேசிய கருத்தரங்கம் நடைபெற்றது.

இக் கருத்தரங்கில் கர்நாடகம், ஆந்திரா, கேரளா உட்பட 8 மாநிலங்களிலிருந்து, பல்வேறு கல்வி நிறுவன பேராசிரியர்கள், கல்வியாளர்கள், மாணவ, மாணவிகள் பங்கு பெற்று ஆய்வு கட்டுரைகளை சமர்பித்தனர்.

இக்கருத்தரங்கில் அன்னை கல்வி குழுமத்தின் செயலர் எம்.ஐ. ஹுமாயுன் கபீர் தலைமை உரையாற்றினார். அன்னை கல்வியியல் கல்லூரி முதல்வர் முனைவர் வெ.சண்முகநாதன் வரவேற்புரை வழங்கினார். அன்னை நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி முனைவர் ஆர். ராஜ்குமார் முன்னிலை வகித்தார்.

கருத்தரங்கின் துவக்க விழாவில் ராஜஸ்தான் மாநிலம் ஆஜ்மீர் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் (என்.சி.இ.ஆர்.டி) முதல்வர், முனைவர் ஜி. விஸ்வநாதப்பா கலந்து கொண்டு துவக்க உரையாற்றினர். கற்றல் கற்பித்தலில் புதுமையான கல்வி ஆராய்ச்சி எனும் தலைப்பின் கீழ் சிறப்புரையாற்றினார்.

இக்கருத்தரங்கின் நிறைவு விழாவில் தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழக தேர்வு நெறியாளர் (பொறுப்பு) முனைவர் சி. சின்னப்பன் கலந்து கொண்டு நிறை உரையாற்றி சான்றிதழ்களை வழங்கினார். நிறைவு விழாவில் முனைவர் எம். ஜெயகுமாரி நன்றியுரையாற்றினார். கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை கல்லூரி பேராசிரியர்கள் செய்திருந்தார்.




Annai College of Education
Approved by NCTE and Affiliated to Tamilnadu Teachers Education University, Chennai.
Accredited with NAAC 'B' Grade
Anakudi Road, Kovilacheri, Kumbakonam. 612 503.
National Seminar
on


of Education
NAAC 'B' Grade


Quality
Today &


College


Chennai.